### எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காவிட்டால்

# அரசியலமைப்பு சட்டப்படி ஆளுநர் என்ன செய்வார்?

சென்னை

தமிழகத்தில் மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க 118 தொகுதிகளில் கட்டாயம் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு, எந்த கட்சியும் 118 தொகுதிகளை பெற்றிருக்காத நிலையில், ஜனநாயக முறைப்படி அரசியலமைப்பு சட்டப்பிரிவுகள் 163 மற்றும் 164-ன்படி தமிழக ஆளுநர் 4 வழிமுறைகளைக் கையாண்டு அரசியல் கட்சிகளை ஆட்சியமைக்க சட்டரீதியாக அழைப்பு விடுக்கலாம்.

அதன்படி தேர்தலுக்கு முன்பே அரசியல் கட்சிகள் ஒன்றாகச் சேர்ந்து கூட்டணி அமைத்திருந்தால் அந்த கூட்டணியை அழைக்கலாம். அதிக இடங்களைக் கைப்பற்றிய கட்சி போதிய ஆதரவுடன் இருந்தால் அக்கட்சியை அழைக்கலாம். தேர்தல் முடிந்த பிறகு வெற்றி பெற்ற கட்சிகள் தங்களுக்குள் கூட்டணி அமைத்து இருந்தால் அழைக்கப்படலாம்.

**பெரும்பான்மை அவசியம்**

வெளியிலிருந்து பெறப்படும் ஆதரவுடன் பெரும்பான்மையற்ற மைனாரிட்டி ஆட்சியை அமைக்கும் கட்சியை அழைக்கலாம். இந்த வழிமுறைகளின்படி ஆட்சியமைக்கப்படும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட கட்சியின் சட்டப்பேரவை கட்சித் தலைவராக தேர்வானவர் முதல்வராக நியமிக்கப்படலாம்.

அதன்பிறகு அந்த கட்சியின் முதல்வர் அரசியலமைப்பு சட்டப்பிரிவு 174-ன்படி எஸ்.ஆர். பொம்மை வழக்கில் உச்ச நீதிமன்றம் கடந்த 1994-ல் பிறப்பித்த தீர்ப்பின் அடிப்படையில் அந்த கட்சி சார்பில் சட்டப்பேரவையைக் கூட்டுவார். சட்டப்பேரவையில் ஆட்சி அமைத்த கட்சி பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும்.

அந்த கட்சி தனிப்பெரும்பான்மைக்கான பலத்தை, அதாவது 118 உறுப்பினர்களின் ஆதரவு தங்களுக்கு இருக்கிறது என்பதை நிரூபித்துவிட்டால் அந்த ஆட்சி எந்தவொரு பிரச்சினையும் இன்றி தொடரும். ஒருவேளை அந்தக் கட்சியால் பலத்தை நிரூபிக்க முடியாவிட்டால் அதற்கு அடுத்த இடத்தில் உள்ள கட்சி ஆட்சியமைக்கும் வகையில் தங்களது பெரும்பான்மையை நிரூபிக்க ஆளுநர் அழைப்புவிடுப்பார்.

அதன்படி அந்தக் கட்சி தங்களது பலத்தை சட்டப்பேரவையில் நிரூபித்துவிட்டால் அந்த கட்சி ஆட்சியமைக்கும். இரண்டாவதாக அழைக்கப்பட்ட கட்சியும் ஆட்சியமைக்க முடியாவிட்டால் அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 356-ன்படி குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்படும். அதன்பிறகு மீண்டும் புதிதாக தேர்தல் நடத்தப்படும்.

---

### மேற்கு வங்கத்தில் மலர்ந்தது தாமரை

# அச்சமற்ற புதிய சகாப்தம் தொடக்கம்

### ➲ பிரதமர் நரேந்திர மோடி உணர்ச்சிப்பூர்வ உரை

புதுடெல்லி

மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி 200-க்கும் மேற்பட்ட இடங்களைக் கைப்பற்றி வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பதிவு செய்துள்ளது. இது மேற்கு வங்க மாநிலத்தின் வரலாற்றில் அச்சமற்ற ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கம் என்று பிரதமர் மோடி உணர்ச்சிப்பூர்வமாகக் கூறினார்.

மேற்கு வங்கம், அசாம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தல் வெற்றியை கொண்டாடுவதற்காக பிரதமர் மோடி நேற்று டெல்லியில் உள்ள பாஜக தலைமை அலுவலகத்துக்கு வருகை தந்தார். அப்போது அவர் தொண்டர்களிடம் உணர்ச்சிப்பூர்வமாக உரையாற்றியதாவது:

மேற்கு வங்க தேர்தல் வரலாற்று வெற்றியின் மூலம், கங்கோத்திரி முதல் கங்கா சாகர் வரை எங்கும் தாமரை மலர்ந்துள்ளது. 15 ஆண்டு கால மம்தா பானர்ஜியின் திரிணமூல் காங்கிரஸ் ஆட்சியை வீழ்த்தி, முதன்முறையாக மேற்கு வங்கத்தில் பாஜக ஆட்சிப் பொறுப்பை ஏற்பது இந்திய அரசியலில் முக்கிய திருப்புமுனையாக இருக்கிறது.

இந்த வெற்றியின் மூலம் இந்திய ஜனநாயகமும், நமது அரசியலமைப்பும் மீண்டும் ஒருமுறை வென்றுள்ளது. இதற்கு, கட்சித் தலைவர் நிதின் நவீன் வழிகாட்டுதலும், தொண்டர்களின் அயராத உழைப்புமே காரணம். நிதின் நவீன் தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு சந்தித்த முதல் தேர்தலிலேயே இந்த பிரம்மாண்ட வெற்றி பாஜகவுக்கு கிடைத்துள்ளது. கடந்த 2013-ம் ஆண்டு காசியில் நான் வேட்பு மனு தாக்கல் செய்த போது தாய் கங்கை என்னை அழைத்தாள். இன்று கங்கை மட்டுமின்றி பிரம்மபுத்திரா மற்றும் அன்னை காமாக்யாவின் ஆசியும் பாஜகவுக்குக் கிடைத்துள்ளது. இதன் மூலம் அசாமில் தொடர்ந்து 3-வது முறையாக பாஜக கூட்டணி ஹாட்ரிக் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளது.

மேற்கு வங்கத்தில் நிலவி வரும் வன்முறை அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இனி வரும் காலங்களில் பழி வாங்கும் அரசியலுக்குப் பதிலாகப் பண்பட்ட மாற்றத்துக்கான அரசியலே இங்கு முன்னிறுத்தப்பட வேண்டும்.

மேற்கு வங்கம் மட்டுமின்றி, மகாராஷ்டிரா, குஜராத், நாகாலாந்து மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்களில் நடைபெற்ற இடைத்தேர்தல் முடிவுகளும் பாஜகவுக்கு மிகுந்த ஊக்கமளிப்பதாக உள்ளன. குறிப்பாக, பாராமதி தொகுதியில் மகாராஷ்டிர துணை முதல்வர் சுனேத்ரா பவார் பெற்ற வெற்றி பாராட்டுக்குரியது.

இரண்டு கட்டங்களாக நடைபெற்ற மேற்கு வங்க தேர்தலில், பல்வேறு சவால்களைக் கடந்து பாஜக பெரும்பான்மைக்குத் தேவையான 148 இடங்களைத் தாண்டி 200-க்கும் அதிகமான தொகுதிகளைக் கைப்பற்றி வங்க மண்ணில் புதிய அரசியல் வரலாற்றை எழுதியுள்ளது.

**ஜனநாயகத்துக்கு வெற்றி**

நமது அரசியலமைப்பு நிறுவனங்களும், ஜனநாயக நடைமுறைகளும் இன்று வெற்றி பெற்றுள்ளன. மேற்கு வங்கத்தில் 93 சதவீத வாக்குப் பதிவு என்பது வரலாற்றுச் சிறப்புமிக்கது. அசாம், தமிழகம், புதுச்சேரி மற்றும் கேரளாவிலும் புதிய வாக்குப் பதிவு சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன.

இந்திய ஜனநாயகத்தின் மாண்பைக் காத்த தேர்தல் ஆணையம், அதன் ஊழியர்கள் மற்றும் பாதுகாப்புப் பணியாளர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களது பங்களிப்பை வரலாறு என்றும் நினைவில் கொள்ளும்.

இவ்வாறு பிரதமர் மோடி உரையாற்றினார்.

மேற்கு வங்கத்தில் 2 வாரங்களுக்கு மேலாக முகாமிட்டு தேர்தல் வியூகங்களை வகுத்த மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா "இந்த வெற்றி வரலாற்று சாதனை" என்று வர்ணித்துள்ளார். மேலும், இந்த வெற்றி ஊடுருவல்காரர்களுக்கு ஒரு பாடமாக அமைந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

**தமிழகம், புதுச்சேரி தேர்தல் முடிவுகள்**
முழு விவரம் உள்ளே...

CHENNAI இந்து தமிழ் J2 ▸ செவ்வாய், மே 5, 2026 ▸ www.hindutamil.in



நடிப்பில் இருந்து அரசியலுக்கு மாறி களம்கண்ட

முதல் தேர்தலிலேயே வரலாறு காணாத வெற்றி

# தமிழக முதல்வர் ஆகிறார் விஜய்!



## விசில் புரட்சி மூலம் திமுக ஆட்சியை வீழ்த்தியது தவெக

படம்: பி.ஜோதிராமலிங்கம்

சென்னை

…மிழக சட்டப்பேரவைத் தேர்தலில் …ிஜய்யின் தவெக அதிக தொகுதி…ளில் வெற்றி பெற்றுள்ளது. முதல்…ராக விஜய் பதவியேற்க உள்ளார். …காளத்தூர் தொகுதியில் தொடர்ந்து …ன்று முறையாக வெற்றி பெற்ற …தல்வர் மு.க.ஸ்டாலின் இத்தேர்…லில் தோல்வியடைந்தது திமுக…ினரிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தி…ுள்ளது. அதிமுக பொதுச் செய…ாளர் பழனிசாமி தனது எடப்பாடி …தாகுதியில் வெற்றியை தக்கவைத்…துக் கொண்டுள்ளார். காரைக்குடியில் …பாட்டியிட்ட நாதக தலைமை ஒருங்…கிணைப்பாளர் சீமான் உட்பட அக்…ட்சி வேட்பாளர்கள் அனைவரும் …டபாசிட் இழந்துள்ளனர். நடிப்பில் …ிருந்து அரசியலுக்கு மாறி, தவெக …ட்சியைத் தொடங்கிய விஜய், களம் …ண்ட முதல் தேர்தலிலேயே எந்த கட்சி…டனும் கூட்டணி சேராமல் தனித்துப் …பாட்டியிட்டு வெற்றி பெற்றுள்ள…ால், அக்கட்சியினர் மிகுந்த உற்…ாகம் அடைந்துள்ளனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் …4 தொகுதிகளிலும் ஒரே கட்டமாக …டந்த ஏப்.23-ம் தேதி நடந்தது. இதில் …ிமுக, அதிமுக, தவெக, நாதக ஆகிய …ட்சிகள் இடையே நான்குமுனைப் …பாட்டி நிலவியது. இந்நிலையில், …தர்தல் முடிவுகள் நேற்று அறிவிக்கப்…ட்டன. வாக்கு எண்ணிக்கை தொடங்…ியது முதலே முன்னிலையில் …

கூறிவந்த அவர், அவ்வாறே 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டார்.

"இவரும், மற்ற கட்சிகளைப்போல காணாமல் போவார். அடுத்த தேர்தலில் திராவிடக் கட்சிகளில் ஒன்றுடன் கூட்டணி அமைத்துபோட்டியிடுவார்" என்று அரசியல் விமர்சகர்கள் கூறி வந்தனர். விஜய் ரசிகர்களின் செயல்பாடுகளும் விமர்சனத்துக்கு உள்ளாகின. இதற்கிடையே, கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த சம்பவம், அக்கட்சிக்கும், தலைவர் விஜய்க்கும் பெரிதும் பின்னடைவாக அமைந்தது. அதன்பிறகு, வீட்டுக்குள்ளேயே பல நாட்கள் முடங்கி இருந்தார் விஜய்.

கூறப்பட்ட நிலையில், தவெக வேட்பாளர்கள் பலரும் பிரச்சாரத்துக்கு கூட செல்லிட முடியாதவர்களாக இருந்தனர். வாக்குப்பதிவுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகளும் தவெகவுக்கு சராசரியாக 20-25 இடங்கள் மட்டுமே கிடைக்கும் என்றன.

### தனிப்பெரும் கட்சியான தவெக

இந்த சூழலில், நேற்று நடைபெற்ற வாக்கு எண்ணிக்கையின்போது, தொடக்கம் முதலே தவெகவினர் முன்னிலை பெற்று வந்தனர். 100 இடங்களுக்கு மேல் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாகவும் தவெக உருவெடுத்துள்ளது. இதை தொடர்ந்து, 'விசில்' சின்னம் ஒதுக்கப்பட்டதும், அக்கட்சியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்துள்ளது. விஜய் தொடங்கி, அக்கட்சி வேட்பாளர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள், ரசிகர்கள் அனைவரும் பிரச்சாரக் கூட்டங்களின்போது உற்சாகத்துடன் 'விசில்' ஊதியது, அக்கட்சிக்கு மாபெரும் வெற்றியை பெற்றுத் தந்துள்ளது. தவெகவின் இந்த விசில் புரட்சியால், அசுர பலத்துடன் ஆண்டு வந்த திமுக வீழ்த்தப்பட்டுள்ளது.

ரூ.8 ஆயிரம் கூப்பன், மகளிர் உரிமைத் தொகை ரூ.2 ஆயிரமாக உயர்வு உள்ளிட்ட 500-க்கும் மேற்பட்ட வாக்குறுதிகள் கொண்ட தேர்தல் அறிக்கையை திமுக வெளியிட்டது. 3 மாத மகளிர் உரிமைத் தொகை ரூ.3,000 உடன் கோடைகால சிறப்பு உதவித் தொகை ரூ.2,000 என மொத்தம் ரூ.5 ஆயிரத்தை தேர்தலுக்கு முன்பாக மகளிரின் வங்கிக் கணக்கில் திமுக அரசு வரவு வைத்தது. அதேபோல, …

→ கொளத்தூரில் ஸ்டாலின் தோற்றதால் அதிர்ச்சியில் திமுக

→ விஜய் அலையில் சிக்கிய அதிமுகவும் நிலைகுலைந்தது

→ சீமான் உட்பட நாதகவினர் அனைவரும் டெபாசிட் இழப்பு



### மெஜாரிட்டி ஆட்சிக்குத் தேவையான 118 இடங்கள் கிடைக்கவில்லை

### விஜய்யின் அடுத்த நகர்வு என்ன?

தமிழகத்தில் தொங்கு சட்டப்பேரவை அமையும் சூழல் உருவாகியுள்ள நிலையில், தமிழகத்தின் பல்வேறு கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களது ஆதரவைப் பெற விஜய் திட்டமிட்டுள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், விஜய்யின் தவெக 108 இடங்களைக் கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. எனினும், ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மை பலமான 118 இடங்களைப் பெறாததால், தமிழகத்தில் தற்போது 'தொங்கு சட்டப்பேரவை' அமையும் சூழல் உருவாகியுள்ளது. ஆட்சி அமைக்க இன்னும் 10 இடங்கள் தேவைப்படுவதால், கட்சிகளிடம் ஆதரவு கோருவது குறித்து கட்சி நிர்வாகிகளுடன் விஜய் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார்.

தற்போது தவெக முன்பு இரண்டு வாய்ப்புகள் உள்ளன. ஒன்று அதிமுகவின் ஆதரவைக் கோருவது. மற்றொன்று, திமுக கூட்டணிக் கட்சிகளின் ஆதரவை கோருவது. அதிமுக தலைமையிலான கூட்டணி 53 இடங்களை கைப்பற்றியுள்ளது. ஒருவேளை அதிமுக ஆதரவு அளித்தால் தவெக மிக எளிதாக ஆட்சி அமைக்க முடியும். ஆனால், பிரச்சாரத்தின்போது அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமியை விஜய் கடுமையாக விமர்சித்துப் பேசினார். இந்த சூழலில், தற்போது பழனிசாமி ஆதரவு அளிப்பாரா என்பது தெரியவில்லை.

மற்றொருபுறம், திமுக கூட்டணியில் உள்ள காங்கிரஸ், விசிக மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆதரவைப் பெறவும் விஜய் திட்டமிட்டு வருகிறார்.

இதற்கிடையே, தவெகவின் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்துள்ள காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, தொலைபேசி வாயிலாக விஜய்யைத் தொடர்பு கொண்டு தனது ஆதரவை தெரிவித்துள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன.

காங்கிரஸ் மட்டுமின்றி, திமுக கூட்டணியில் உள்ள விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் அதிமுக கூட்டணியில் உள்ள பாமக ஆகியவற்றுடனும் பேச்சுவார்த்தை நடத்த தவெக திட்டமிட்டுள்ளது. பாமக தரப்பில் இருந்து இதுவரை சாதகமான பதில் வராததால், திருமாவளவன் தலைமையிலான விசிகவுடன் பேச்சுவார்த்தையைத் தொடங்கவும் விஜய் தரப்பு ஆர்வம் காட்டி வருகிறது.

# தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பை தலைவணங்கி ஏற்கிறோம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கருத்து

சென்னை

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் தீர்ப்பைத் தலைவணங்கி ஏற்பதாகவும், வென்றவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவிப்பதாகவும் முதல்வரும் திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:



கடந்த 5 ஆண்டு காலத்தில் ஏராளமான திட்டங்களை உருவாக்கி, தமிழக மக்களுக்கு நல்லாட்சியை வழங்கினோம். தமிழகத்தை அனைத்து வகையிலும் உயர்த்தினோம். தேர்தல் களத்தில் எங்கள் சாதனைகளைச் சொல்லியே வாக்குகளை கேட்டோம். மக்களுக்கு செய்து கொடுத்த நலத்திட்டங்கள் தொடருவதற்கு வாக்கு கேட்டு நாங்கள் பரப்புரை செய்தோம். திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியை ஆதரித்து வாக்களித்த தமிழக மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்ல, வாக்களிக்க மறந்தவர்களுக்கும் சேர்த்தே ஆட்சி நடத்தினேன். அனைத்து மக்களுக்கும் உண்மையாக இருந்தேன். எனது மனச்சாட்சிப்படியே செயல்பட்டேன். எனது சக்தியை மீறி உழைத்தேன். என்னைப் போன்றே களத்தில் உழைத்த என் உயிரோடு கலந்திருக்கும் தொண்டர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றி. எங்களுடன் தோள்நின்ற கூட்டணிக் கட்சியினர் அனைவருக்கும் நன்றி.

எனது அரசியல் வாழ்வில் அதிகப்படியான வெற்றியையும் பார்த்துள்ளேன். தோல்விகளையும் சந்தித்துள்ளேன். எனவே, லட்சியமும் கொள்கையும்தான் முக்கியமே தவிர, வெற்றி தோல்விகள் மட்டுமல்ல என்று செயல்படக்கூடியவன் நான். அதனால், திமுகவின் அரசியல் பயணம் தொய்வின்றி தொடரும். இதுவரை மக்களுக்காக சிறப்பான ஆளும்கட்சியாக செயல்பட்ட திமுக, இனி சிறப்பான எதிர்க்கட்சியாக செயல்படும். வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவிக்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.